**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**
**அ.வ.எண். 125/2010**

இந்நீதிமன்றத்து பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமுலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 24.07.2025**

**பெயர் – கவிதா**

**க/பெ – சண்முகம்**

**சாட்சி – PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்–** 03.57.p.m

**2, 3 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

1. நான் 02.06.1967 ல் பிறந்தேன். நான் எப்போது பிறந்தேன் என்பதை காண்பிக்க எந்தவிதமான ஆவணத்தையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய ஆதார் அட்டையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் காட்டியுள்ளேன். 15.04.1992–ல் எனக்கு திருமணம் நடைபெற்றது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7ம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை. எந்த பள்ளியில் படித்தேன் என்றால் காட்டுப்பாக்கம் அரசுப்பள்ளியில் படித்தேன். எந்த வருடம் படிப்பை முடித்தேன் என்றால் 1992ல் நான் படிப்பை நிறுத்தி 6 மாதத்தில் எனக்கு திருமணம் நடந்தது.

2. 1 முதல் 7ம் வகுப்பு வரை எந்த ஆண்டிலும் நான் தேர்ச்சி பெறாமல் இருந்ததில்லை. நான் சாட்சியம் கூறுவதை வைத்து, நான் 1967 – ஆம் வருடம் பிறந்திருக்க முடியாது, இவ்வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிறந்த வருடம் 1979 இவ்வழக்கிற்காக 1967 என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எத்தனை வயதில் திருமணம் நடந்தது என்றால் 14 வயதில் நடந்தது. இந்த வழக்கை நான் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியுமா என்றால் தமிழ் மற்றும் ஆங்கிலம் இரண்டுமே தெரியாது. இந்த வழக்கில் உள்ள அ அட்டவணை மற்றும் பி அட்டவணை என்று கூறினால் தெரியுமா என்றால் தெரியும்.

3. வழக்கின் அ அட்டவணை சொத்து என்ன என்றால் நினைவில் இல்லை. அதேபோல் பி அட்டவணை சொத்துப்பற்றியும் நினைவில் இல்லை என்றால் நினைவில் இல்லை. இந்த வழக்கில் உள்ள சங்கதிகள் ஆங்கிலத்தில் உள்ளது எனவே நான் படித்திருக்க வாய்ப்பில்லை என்றால் எனது வழக்கறிஞர் கூறியதால் தெரிந்தது. வழக்குரையில் உள்ள சங்கதிகளைப் பற்றி எனது வழக்கறிஞர் தட்டச்சு செய்வதற்கு

முன்பு என்னை கேட்டு செய்யப்பட்டதா அல்லது தட்டச்சு செய்த பிறகு என்னிடம் கூறப்பட்டதா என்றால் என்னை கேட்டு தான் ஒவ்வாரு பக்கமும் எனது வழக்கறிஞரால் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த வழக்குரையில் இருக்கிற சங்கதிகளை தட்டச்சு செய்த பிறகு எனது வழக்கறிஞர் எந்த மொழியில் எனக்கு தெரிவித்தார் என்றால் தமிழில் தான் தெரிவித்தார். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது என்றும் இது தட்டச்சு செய்தபிறகு அதை படித்து தமிழில் சொல்லி புரியவைத்தார் என்று வழக்குரையில் நான் எங்கும் கூறவில்லை என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

4. இவ்வழக்கின் பிரமாணவாக்குமூலத்தை படித்துப்பார்த்தேனா அது எந்த மொழியில் இருந்தது என்றால் ஆங்கிலத்தில் இருந்தது. சாட்சி பிறகு மாற்றி தெரியவில்லை என தெரிவிக்கிறார். தாவா சொத்து முதலில் யாருக்கு சொந்தமானது என்றால் எனது தாத்தாவான சுப்பிரமணியமுதலியாருக்கு சொந்தமானது. இவ்வழக்கில் நான் கூறியுள்ள அனைத்து சொத்துக்களும் எனது தாத்தாவிற்கு சொந்தமான சொத்துக்களா என்றால் ஆம். எனது தாத்தாவிற்கு இந்த சொத்துக்கள் எப்படி கிடைத்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்துக்களில் உள்ள சில சொத்துக்களை எனது தாத்தா 1923 முதல் 1974 வரை வெவ்வேறு கிரையப்பத்திரத்தின் மூலம் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. இந்த சொத்துக்கள் சம்பந்தமாக எனது தாத்தாவின் காலத்திற்கு பிறகு 1985ல் ஒரு பாகப்பிரிவினை நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த பத்திரத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அது யார் யாருக்கு நடுவில் நடந்த பாகப்பிரிவினை என்றால் அண்ணாமலை, சிதம்பரம், முருகேசன், குமார் அவர்களுக்கிடையே நடந்தது. அப்போது அவர்களின் உடன் பிறந்த சகோதரிகளும் உடன் இருந்தார்கள், அவர்கள் கையெழுத்துப்போட்டு கொடுத்தார்கள். சிதம்பரம் என்பவர் எனது தந்தையார். எனது தகப்பனாருக்கு பாகப்பிரிவினையில் 2ம் அட்டவணை சொத்து கிடைத்தது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் பாகப்பிரிவினை செய்பவர்கள் தனித்தனி குடும்பமாக பிரிந்துவிட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது தந்தையான சிதம்பரம் 2014ல் இறந்துவிட்டார்.

6. இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது வழக்குரையில் அன்றைய தேதியில் தாவா சொத்தின் நிலையை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை, எனக்கு தெரியாது. என்படி எந்த எந்த ஊரில் உள்ளது என்றால் கோபரசநல்லூர், பஞ்செட்டி, காட்டுப்பாக்கம், பாக்கம் மற்றும் பொன்னேரியில் உள்ளது. வழக்கு தாக்கல் செய்யும் போது கோபரசநல்லூர் சொத்தின் நிலை என்ன அது எனது தந்தையார் பெயரில் தற்போதும் உள்ளதா என்றால் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். யார் யார்க்கு நடுவில் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் கணேசன், சரிதா, லாவன்யா, தர்சினி ஆகியோருக்கிடையே செய்யப்பட்டது. கணேசன் மற்றும் சரிதாவிற்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. லாவன்யா மற்றும் தர்சினி கணேசனின் பிள்ளைகள் ஆவர். வழக்கு தாக்கல் செய்யும்போது பஞ்செட்டியில் உள்ள சொத்தின் நிலை என்ன என்றால் எனது தந்தை விற்றுவிட்டார். காட்டுப்பாக்கம் சொத்தில் வீடு இருந்தது. தற்போது எனது அண்ணன் இடித்துவிட்டு வீடு கட்டினார். அதேபால் வழக்கு தாக்கல் செய்யும்போது பாக்கம் சொத்தின் நிலை என்ன என்றால் எனது தந்தை விற்றுவிட்டார். வழக்கு தாக்கல் செய்யும்போது பொன்னேரி சொத்தின் நிலை என்ன என்றால் எனது தந்தை விற்றுவிட்டார்.

7. பொன்னேரியில் எனது பெயரில் எனது தந்தை வாங்கி கொடுத்த சொத்தின் தற்போதைய நிலை என்ன என்றால் எனது தந்தை வாங்கவில்லை நானே வாங்கினேன். அது தற்போது என்னிடம் தான் உள்ளது. இச்சொத்தை எந்த வருடம் வாங்கினேன் என்றால் 1993 ல் வாங்கினேன். என்படி 1993–ல் எனக்கு 15 வயது என்றால் சரிதான். நான் வருமாண வரி கட்டுபவரா என்றால் இல்லை. எங்கேயாவது வேலை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு காதல் திருமணமா அல்லது அமைவு திருமணமா என்றால் வீட்டார்கள் பார்த்து திருமணம் செய்து வைத்தார்கள். நான் எனது உறவினரான தாய் மாமனை திருமணம் செய்து கொண்டேன் எனது வீட்டார்கள் முன்னின்று அவர்கள் செலவில் தான் திருமணம் நடந்தது. அவ்வாறு இருக்கையில் மேற் கூறிய பொன்னேரியில் அமைந்துள்ள சொத்தினை என்னால் வாங்கி இருக்க இயலாது என்றும் எனது தந்தைதான் எனக்கு வாங்கி கொடுத்தார் என்றும் கூறினால் சரியல்ல.

8. தாவா சொத்துக்களின் உண்மை நிலையை வழக்கை தாக்கல் செய்யும்போது நான் குறிப்பிடவில்லை என்றும் இந்த வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் கூறினால் தாவா சொத்தின் நிலையைப்பற்றி நான் குறிப்பிடவில்லை. அதேபோல் தாவா சொத்து பற்றிய பரிவர்த்தனை குறித்தும் அது கிடைக்கப் பெற்ற கிரைய பத்திரத்தை பற்றியும் எனது வழக்குரையில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் பஞ்செட்டி என்று குறிப்பிட்டது பெரியபனிச்சேரியா என்றால் சொத்தில் என்ன பெயர் இருந்ததோ அதை தான் நான் குறிப்பிட்டேன். இவ்வழக்கில் வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா, எந்தெந்த சொத்துக்களுக்கு தாக்கல் செய்தேன் என்றால் அனைத்து சொத்துக்களுக்கும் தாக்கல் செய்துள்ளேன். பஞ்செட்டி என்று நான் கூறும் சொத்தினை எனது தந்தை எந்த வருடம் விற்பனை செய்தார் என்றால் எனக்கு தெரியாது. எனது வழக்குரையில் பெரியபனிச்சேரியில் உள்ளதாக நான் கூறும் சொத்தினை எனது தந்தை 1993 ல் விற்பனை செய்துவிட்டார் என்றால் தெரியாது.

9. அந்த விவரம் எனக்கு தெரிந்த காரணத்தினால் தான் அந்த சொத்திற்கான வில்லங்க சான்றை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தாக்கல் செய்ததாகத் தான் எனக்கு ஞாபகம் உள்ளது. எனது தகப்பனார் அந்த சொத்தை விற்று தான் எனது திருமணத்தை நடத்தினார் என்றும், நான் கூறும் பொன்னேரியில் உள்ள சொத்தினை எனக்கு வாங்கி கொடுத்தார் என்றால் எனக்கு திருமணம் செய்வித்தது எனது மாமியார் வீடு. அந்த சொத்தை நான் தான் வாங்கினேன். அந்த சொத்து யாருக்கு விற்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் 2010 ல் இவ்வழக்கு தாக்கல் செய்யும்போது வில்லங்க சான்றின் மூலம் தெரியவந்தது. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள பொன்னேரி பரிக்கிப்பட்டில் உள்ள சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் என்னுடைய சொத்து என் பெயரில் தான் உள்ளது. எனது தந்தை வாங்கிய சொத்தினை விற்றுவிட்டார்.

10. நான், எனது தந்தை மற்றும் எனது அண்ணன் சேர்ந்து பொன்னேரி பரிக்கிப்பட்டில் உள்ள சொத்தினை வாங்கினோமா என்றால் ஆம். அது 1993–ல் வாங்கப்பட்டது. எனது சமுதாயத்தில் திருமணம் யார் வீட்டார் செய்வார் என்றால் இரு வீட்டாரும் செய்வார்கள் எனது திருமணம் எனது மாமியார் வீட்டார் செய்தனர். வழக்குரையிலோ, பிரமாணவாக்குமூலத்திலோ எனது திருமணத்தை எனது மாமியார் வீட்டார் தான் செய்தனர் என்ற விவரத்தினை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கோபரசநல்லூரில் உள்ள சொத்தினை நான் வழக்கு தாக்கல் செய்யும்போது

கட்டிடம் இருந்தது என்றால் ஆரம்பித்து செய்து கொண்டு இருந்தார்கள். காட்டுப்பாக்கம் இடத்தில் வீடு இருந்தது என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் 2008 சம்மந்தப்பட்ட ஏதேனும் ஆவணத்தை பற்றி கூறியுள்ளேனா என்றால் பரிக்கப்பட்டு நிலத்தனை விற்றதை பற்றி குறிப்பிட்டு இருக்கிறேன். வேறு எதும் 2008 ஆவணம் பற்றி குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை.

11. கோபரசநல்லூர் சொத்து சம்பந்தமாக ஏதேனும் ஆவணம் குறிப்பிட்டுள்ளேனா என்றால் வில்லங்கம், ஆவணத்தின் சான்றிட்ட நகல், பாகப்பிரிவினைப்பத்திரம், வி.எ.ஓ விடம் வாங்கிய சிட்டா மற்றும் அடங்கல் ஆகியவற்றை குறிப்பிட்டுள்ளேன். எனது அண்ணன் கணேசன் எந்த வகுப்பு வரை படித்துள்ளார் என்றால் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை. எனது அண்ணன் லாரி சொந்தமாக வைத்து வியாபாரம் செய்து, ஓட்டியும் வந்தார். எனது தந்தை என்ன தொழில் செய்து வந்தார் என்றால் விவசாயம் தான் செய்து வந்தார். கோபுரசநல்லூாரில் உள்ள எஸ்.பி.சி.ஜி ஹாலோபிலாக்ஸ் நிறுவனத்தை எனது தந்தை தான் வைத்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தாத்தாவின் சொத்தில் 4 ல் 1 பங்கு எனக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். அது கூட்டுக்குடும்ப சொத்து என்று பாவித்து இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளேனா என்றால் தாத்தாவின் சொத்து எனது தந்தைக்கு வந்த பிறகு எல்லோருக்கும் பாகம் பிரித்து கொடுக்கப்பட்டது எனக்கு மட்டும் கொடுக்காத காரணத்தினால் தாக்கல் செய்துள்ளேன்.

12. எனது தந்தை இச்சொத்துக்களை பாகம் பிரித்து கொடுத்தார் என்ற சங்கதியினை வழக்குரையில் எங்கேயாவது குறிப்பிட்டுள்ளேனா என்றால் தெரிந்ததால் தான் வழக்கு தாக்கல் செய்தேன். இந்த வழக்கில் பிரதிவாதிகள் செய்த கிரையங்கள் மற்றும் பரிவர்த்தனைகள் தொடர்பான பத்திரத்தினை வழக்கு தொடுக்கும்போதே வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேனா என்றால் கொடுத்துவிட்டேன். நான் இந்த வழக்கில் எந்த சொத்தும் கூட்டுக்குடும்ப சொத்து கிடையாது அதனால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் கூறினால் சரியல்ல, பாகப்பிரிவினை பத்திரம் நீதிமன்றத்தில் கொடுத்து தான் வழக்கு தாக்கல் செய்தேன். இந்த பாக்பிரிவினை பத்திரம் என்பது 1985 பத்திரம் தான் என்றால் சரிதான். அந்த 1985 ஆவணத்தில் சிதம்பரத்திற்கு கொடுக்கப்பட்ட சொத்துக்கள் தனிப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிட்டுள்ளது என்றும் அவ்வாறு இருக்கையில் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் தனிப்பட்ட ஒருவர் எனது தந்தை அதன் அடிப்படையில் நான் வழக்கு தாக்கல் செய்தேன். எனது தந்தை இருக்கும் காலத்திலே சொத்துக்களை விற்பனை செய்துவிட்டு, மற்ற ஏற்பாடுகளும் செய்துவிட்டார் என்பதால் அந்த சொத்தினை கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

13. நான் தாவா சொத்தில் எந்த காலத்திலும் கூட்டு அனுபவத்தில் இருந்ததில்லை என்றும் இவ்வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் கூட்டுச்சொத்து என்பதால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழ்கினை தாக்கல் செய்யும்போதே தாவா சொத்துக்கள் விற்கப்பட்டு அனுபவம் மற்ற நபர்களுக்கு மாறிவிட்டது என்றும் அவ்வாறு இருப்பின் நான் கூட்டு அனுபவத்தில் உள்ளதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்யும்போது அனைத்து சொத்துக்களும் விவசாய நிலங்களாக குறிப்பிட்டு தாக்கல் செய்தேனா என்றால் காட்டுப்பாக்கத்தில் வீடு இருந்தது, கோபரசநல்லூரில் வீடு

கட்டுவதாக கேள்விப்பட்டேன், மற்ற இடங்கள் விவசாயம் நிலங்கள். அவ்வாறு இருக்கும்போது இவ்வழக்கில் முத்திரை தீர்வு/நீதிமன்ற கட்டணம், மதிப்பீடு சரியாக கட்டப்படவில்லை என்றால் சரியல்ல.

14. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு நனோ அல்லது எனது வழக்கறிஞரோ பிரதிவாதிகளுக்கு ஏதேனும் அறிவிப்பு அனுப்பியுள்ளோமா என்றால் இல்லை, வழக்கு தொடுத்த பிறகு தான் நீதிமன்றத்தில் இருந்து அறிவிப்பு அனுப்பப்பட்டது. பிரதிவாதிகள் வழக்கு சொத்துக்களின் உண்மை நிலையினை அவர்களின் பதில் அறிவிப்பில் குறிப்பிடுவார்கள் என்ற காரணத்தினால் தான் நான் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. பாக்கத்தில் இருக்கும் சொத்து எனது தந்தை பெயரில் இருந்தது. பாக்கத்தில் உள்ள சொத்தினை எனது தந்தை எப்பொழுது வாங்கினார் என்றால் ஞாபகம் இல்லை. எப்பொழுது விற்பனை செய்தார் என்றால் 1992–ல் விற்பனை செய்தார். பாக்கம் சொத்து கிரையம் பெற்றவர்களின் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சேர்க்கவில்லை. எனது தந்தை மற்றும் அண்ணன் பெயரில் உள்ள பொன்னேரி பரிக்கப்பட்டு கிராமம் சொத்தின் கிரைய ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அதில் எங்கேயாவது பாக்கம் சொத்தை விற்று அதன் பணத்தை கொண்டு இது வாங்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை.

15. ஆகையால் இந்த வழக்கு சொத்துக்களில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், வழக்கு சொத்துக்களில் எந்த பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் கூறினால் சரியல்ல. இந்த வழக்கு காலகெடுவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கை எந்தவிதமான முகாந்திரமும் மற்றும் உாிமையும் இல்லாமல் தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் உண்மையை மறைத்தும் தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**( குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 5.35 p.m.**